# திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த
# ப்ரபந்ந காயத்ரி என்னும்
# இராமானுச நூற்றந்தாதி

---

## இராமானுச நூற்றந்தாதித் தனியன்கள்

### வேதப் பிரான் பட்டர் அருளிச் செய்தவை

முன்னை வினை அகல * மூங்கில் குடி அமுதன் *
பொன்னங்கழல் கமலப் போதிரண்டும் * - என்னுடைய
சென்னிக்கு அணி ஆகச் சேர்த்தினேன் * தென் புலத்தார்க்கு
என்னுக் கடவுடையேன் யான்?

நயந்தரு பேரின்பம் எல்லாம் பழுதென்று * நண்ணினர் பால் *
சயந்தரு கீர்த்தி இராமானுச முனி தாள் இணை மேல் *
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமுது * ஓங்கும் அன்பால்
இயம்பும் * கலித்துறை அந்தாதி ஓத இசை நெஞ்சமே!

### அபியுக்தர் அருளிச் செய்தது

சொல்லின் தொகை கொண்டு * உனதடிப் போதுக்குத் தொண்டு செய்யும் *
நல் அன்பர் ஏத்தும் உன் நாமம் எல்லாம் * என்தன் நாவின் உள்ளே *
அல்லும் பகலும் அமரும்படி நல்கு * அறு சமயம்
வெல்லும் பரம! * இராமானுச! * இது என் விண்ணப்பமே

---

## திருவரங்கத்தமுதனார் அருளிச் செய்த
## ப்ரபந்ந காயத்ரி என்னும்
## இராமானுச நூற்றந்தாதி

** பூ மன்னு மாது பொருந்திய மார்பன் * புகழ் மலிந்த
பா மன்னு மாறன் * அடி பணிந்து உய்ந்தவன் ** பல் கலையோர்
தாம் மன்ன வந்த இராமானுசன் * சரணாரவிந்தம்
நாம் மன்னி வாழ * நெஞ்சே! சொல்லுவோம் அவன் நாமங்களே 1

** கள்ளார் பொழில் தென்னரங்கன் * கமலப் பதங்கள் நெஞ்சில்
கொள்ளா * மனிசரை நீங்கி ** குறையல் பிரான் அடிக் கீழ்
விள்ளாத அன்பன் இராமானுசன் * மிக்க சீலம் அல்லால்
உள்ளாது என் நெஞ்சு * ஒன்றறியேன் எனக்குற்ற பேர் இயல்வே 2

** மொழியைக் கடக்கும் * பெரும் புகழான் * வஞ்ச முக்குறும்பாம்
குழியைக் கடக்கும் * நம் கூரத்தாழ்வான் சரண் கூடிய பின் **
பழியைக் கடத்தும் இராமானுசன் * புகழ் பாடி அல்லா
வழியைக் கடத்தல் * எனக்கு இனி யாதும் வருத்தம் அன்றே 7

** தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து * தல முழுதும் கலியே
ஆள்கின்ற நாள் வந்து * அளித்தவன் காண்மின் ** அரங்கர் மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல் அருளால் *
வாழ்கின்ற வள்ளல் * இராமானுசன் என்னும் மா முனியே 16

** ஆண்டுகள் நாள் திங்களாய் * நிகழ் காலம் எல்லாம் மனமே!
ஈண்டு * பல் யோனிகள் தோறுழல்வோம் ** இன்றோர் எண் இன்றியே
காண் தகு தோள் அண்ணல் தென் அத்தியூரர் கழல் இணைக் கீழ்ப் *
பூண்ட அன்பாளன் * இராமானுசனைப் பொருந்தினமே 31

** நின்ற வண் கீர்த்தியும் நீள் புனலும் * நிறை வேங்கடப் பொற்
குன்றமும் * வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும் **
உன்தனக்கு எத்தனை இன்பம் தரும் உன் இணை மலர்த் தாள் *
என்தனக்கும் அது * இராமானுச! இவை ஈந்தருளே 76

** இடுமே இனிய சுவர்க்கத்தில் * இன்னம் நரகில் இட்டுச்
சுடுமே? * அவற்றைத் தொடர்தரு தொல்லை ** சுழல் பிறப்பில்
நடுமே? இனி நம் இராமானுசன் * நம்மை நம் வசத்தே
விடுமே? சரணம் என்றால் * மனமே! நையல் மேவுதற்கே 98

** செழுந்திரைப் பாற்கடல் * கண் துயில் மாயன் * திருவடிக் கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில் * மேவு நன் ஞானி ** நல் வேதியர்கள்
தொழும் திருப் பாதன் இராமானுசனைத் தொழும் பெரியோர் *
எழுந்திரைத்து ஆடும் இடம் * அடியேனுக்கு இருப்பிடமே 105

** இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலை என்னும்
பொருப்பிடம் * மாயனுக்கு என்பர் நல்லோர் ** அவை தன்னொடும் வந்து
இருப்பிடம் மாயன் இராமானுசன் மனத்து * இன்று அவன் வந்து
இருப்பிடம் * என்தன் இதயத்துள்ளே தனக்கு இன்புறவே 106

** இன்புற்ற சீலத்து இராமானுச! * என்றும் எவ்விடத்தும்
என்புற்ற நோய் * உடல் தோறும் பிறந்து இறந்து ** எண்ணரிய
துன்புற்று வீயினும் சொல்லுவது ஒன்றுண்டு * உன் தொண்டர்கட்கே
அன்புற்று இருக்கும்படி * என்னை ஆக்கி அங்கு ஆட்படுத்தே 107

** அங்கயல் பாய் வயல் தென்னரங்கன் * அணி ஆகம் மன்னும்
பங்கய மா மலர்ப் * பாவையைப் போற்றுதும் ** பத்தி எல்லாம்
தங்கியது என்னத் தழைத்து நெஞ்சே! நம் தலை மிசையே *
பொங்கிய கீர்த்தி * இராமானுசன் அடிப் பூ மன்னவே 108

**திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்**